விளம்பரப்பலகை செய்தி

தேனி மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் கீழ் பணிபுரிய மாவட்ட வளப்பயிற்றுநர் (மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு) பணிக்கு முற்றிலும் தற்காலிகமாக மதிப்பூதிய அடிப்படையில் பணிபுரிய கீழ்க்கண்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணிக்கு விண்ணப்பிக்க தகுதிகள்:

பதவி	:	மாவட்ட வளப்பயிற்றுநர் (மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு) (MCLF)
கல்வித்தகுதி	:	ஏதேனும் முதுகலைப்பட்டம்
வயது	:	01.06.2026 அன்று வயது 30-50-க்குள்
முன் அனுபவம்	:	சுய உதவிக்குழுக்கள் / கூட்டமைப்புகள், பயிற்றுநர், தன்னார்வ தொண்டு நிறுவனத்துறை மற்றும் கிராமப்புறங்களில் செயல்படுத்தப்பட்ட பிற அரசுத்துறை திட்டங்களில் 4 வருட பணி அனுபவம்.
மதிப்பூதியம்	:	A Grade - ரூ.2000/- மற்றும் B Grade - ரூ.1500/- (ஒரு நாள் பயிற்சிக்கான மதிப்பூதியம்) (ஒரு மாதத்திற்கு அதிகபட்சம் 15 நாட்கள் மட்டும் பணி) (முற்றிலும் தற்காலிக பணி).
மொழிகள்	:	தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வாசிப்பு மற்றும் எழுத்துத்திறன்.
திறன்கள்	:	தகவல் தொடர்புத்திறன் ஒருங்கிணைப்புத்திறன் மற்றும் பிறருடன் பழகும் திறன் ஆகியவற்றைக் கொண்டிருத்தல், மேலும் மொபைல் செயலிகள் Word மற்றும் Execl வலைதளங்களைக் கையாள்வதில் தேர்ச்சி பெற்றிருத்தல்.
விண்ணப்பங்களை நேரில் வழங்க வேண்டிய முகவரி மற்றும் தேர்வு நடைபெறும் இடம்	:	திட்ட இயக்குநர் / இணை இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஒருங்கிணைந்த அலுவலக வளாகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தரைதளம் அலுவலக தொலைபேசி எண்: 04546-255203.

விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் : 17.11.2026 மாலை 5.30 மணிக்குள். இதற்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ள இயலாது மற்றும் இது தொடர்பான கூடுதல் விபரங்களுக்கு மகளிர் திட்ட அலுவலகத்தில் பணி நாட்களில் மட்டும் மாலை 6.00 மணிக்குள் விபரம் பெற்றிடலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
தேனி.